# தகவலளிப்பு மற்றும் திறனளிப்பு

## ‘நிதி-நிலை சுதந்திர மையம்’(Financial Independence Hub)



**நிதி-நிலை துஷ்ப்பிரயோகத்திலிருந்து மீண்டவர்களுக்கான இலவச, இரகசிய மற்றும் தனி-நபர்களுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட ஆதரவுதவி சேவை**


பெருமிதப் பங்காளர் ‘காமன்வெல்த் வங்கி – அடுத்த அத்தியாயம்’
(Proud partner CommBank Next Chapter)

Good Shepherd
Australia New Zealand

Commonwealth Bank

குறிப்பு: இந்த சேவைக்குத் தகுதிபெறுவதற்கு நீங்கள் ஒரு ‘காமன்வெல்த்-வங்கி’ வாடிக்கையாளராக இருக்கவேண்டிய அவசியமில்லை.

# ‘நிதி-நிலை சுதந்திர மையம் ’(Financial Independence Hub) என்பது என்ன?



**நிதி-நிலை துஷ்ப்பிரயோகத்தினால் ஆஸ்திரேலியாவில் தாக்கமுற்றவர்கள் நிதி-நிலை சுதந்திரத்தை உருவாக்கிக்கொள்ளவும், தமது இலக்குகளை அடையவும் அவர்களுக்கு உதவுவதற்கான இலவச, இரகசிய மற்றும் தனி-நபர்களுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட ஆதரவுதவி சேவை.**

## ‘நிதி-நிலை சுதந்திரம்’ என்பது ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானது.

### நீங்கள்:

- ✓ அன்றாட பண விடயங்களை உங்களுடைய கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரவும், பண விடயங்களைப் பற்றிய முடிவுகளை மேற்கொள்வதில் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளவும் விரும்புகிறீர்களா?
- ✓ உங்களுடைய வரவு-செலவுகளைப் பற்றி விளங்கிக்கொள்ள விரும்புகிறீர்களா?
- ✓ நீங்களே சுதந்திரமாக உங்களுடைய வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்கிக்கொள்வதற்கான இயலுமையைப் பெற விரும்புகிறீர்களா?
- ✓ உதாரணமாக, ஒரு கார் அல்லது வீடு ஒன்றை வாங்குவதற்காக உங்களுடைய செலவுகள் மற்றும் சேமிப்பைத் திட்டமிட விரும்புகிறீர்களா?
- ✓ கட்டணங்களைச் செலுத்துவதற்கும், எதிர்பாரா செலவுகளைச் சமாளிப்பதற்குமான இயலுமையைப் பெற விரும்புகிறீகளா?
- ✓ கடன்களைக் குறைத்துக்கொள்ள அல்லது அவற்றைக் கட்டி முடிக்க விரும்புகிறீர்களா?

*“பண விடயங்களில் மதிகெட்டத்தனமாக இருந்த உணர்வைக் கடந்து ஆற்றலும் தன்னம்பிக்கையும் மிக்க நிலையை அடைந்திருக்கிறேன்.”*

## பின் வரும் விடயங்களில் எம்மால் உங்களுக்கு உதவ இயலும்:

- உங்களுடைய ஆற்றல்களை வளர்த்துக்கொள்ளவும், நிதி-நிலை இலக்குகளை உருவாக்கிக்கொள்ளவும், நீண்ட-கால நிதி-நிலை சுதந்திரத்தை உருவாக்கிக்கொள்வதற்கான நடைமுறைக்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவும் ‘ஒருவருக்கு-ஒருவர்’ எனும் ரீதியிலான நிதி-நிலை ஆலோசனைகள்.
- அன்றாட நிதி-நிலை அலுவல்களை நிர்வகிப்பதிலும், இலக்குகளைத் திட்டமிட்டு அவற்றை நோக்கிப் பயணிப்பதிலும் உங்களுடைய தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கான சாதனங்கள் மற்றும் திறன்கள்.
- இதற்கு முன்பு உங்களுடைய கட்டுப்பாட்டில் இல்லாத விடயங்கள் உள்ளடங்க - பண விடயங்களை விளங்கிக்கொள்ளல் – உதாரணமாக, செலுத்தவேண்டிய கட்டணங்கள், கடன்கள், குறைந்துவிட்ட கடன்வாங்கு திறன் ஆகியன.
- உதாரணமாக, கார் அல்லது வீடு ஒன்றை வாங்குவதற்காக சேமிக்கத் துவங்குதல்.
- வேலைக்குத் திரும்புவதற்கு, அல்லது ‘செண்ட்டர்லிங்க்’-இல் பதிவதற்குத் திட்டமிடுவதில் உதவி.
- பரிந்துரைகள், அல்லது உங்களுக்குத் தேவைப்படும் மற்ற சேவைகளைப் பெறல்.

**உங்களைப் போலவே – உங்களுடைய ‘நிதி-நிலை சுதந்திர மைய’(Financial Independence Hub)ப் பயணமும் தனித்துவம் வாய்ந்ததாக இருக்கும்.**



*“பழைய நிலையிலிருந்து நான் மாறி விடயங்களை என் கட்டுப்பாடிற்குள் கொண்டுவர இது உதவுகிறது.”*

## பின் வருவன உங்களுக்குப் பொருந்தினால், நீங்கள் தகுதி பெறுவீர்கள்:

- நீங்கள் வீட்டு அல்லது குடும்ப துஷ்ப்பிரயோக அனுபவத்திலிருந்து மீண்ட ஒருவராக இருந்தால்.
- நீங்கள் கஷ்டத்திலிருந்து பழைய நிலைக்குத் திரும்புபவராக இருந்தால் (அதாவது, நெருக்கடி நிலையில் இல்லாதவர்) மற்றும் உங்களுடைய நிதி-நிலை குறித்த எதிர்காலத்திற்கான திட்டம் ஒன்றை உருவாக்க ஆயத்தமாக இருப்பவர் என்றால்.
- நீங்கள் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும், ஆஸ்திரேலியாவில் வசிப்பவராகவும் இருந்தால். நிங்கள் ஒரு நிரந்தர வசிப்பாளராக, அல்லது விசா ஒன்றை வைத்திருப்பவராக இருக்கவேண்டியதில்லை.



*"நிதி-நிலை ஆலோசனை என்பது ஒரு மாபெரும் பரிகாரமாக இருந்துவந்திருக்கிறது."*

'நிதி-நிலை-சுதந்திர உதவி-மைய'(Financial Independence Hub)த்தின் சேவைக்குத் தகுதிபெறுவதற்கு நீங்கள் ஒரு 'காமன்வெல்த்-வங்கி' வாடிக்கையாளராக இருக்கவேண்டிய அவசியமில்லை. இந்த சேவையைப் பெறுவதற்கு ஆதாரங்களைக் கொடுக்கவேண்டிய தேவை அல்லது உங்களுடைய கதையைச் சொல்லவேண்டிய தேவை உங்களுக்கு இல்லை.

இந்த சேவை இலவசமானது, அந்தரங்கமானது மற்றும் உங்களுடைய தேவைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டது. கால வரையறை எதுவும் இல்லை. உங்களுடைய நிதி-நிலை சுதந்திரத்தை அடைய யதார்த்தமான காலக்-கோடுகளை அடையாளம் காண்பதில் உங்களுடைய அணியினர் உங்களுக்கு உதவுவார்கள்.

## இது இயங்கும் விதம்:

மின்னஞ்சல் அனுப்புங்கள்: FIH@goodshep.org.au அல்லது வரவேற்பு அழைப்பைப் பெற 1300 050 150 எனும் இலக்கத்தினை அழையுங்கள்

### வரவேற்பு அழைப்பு (Welcome Call)

**1.**

உங்களுடைய தற்போதைய நிதி-நிலை, தேவைகள் மற்றும் பண விடயங்களில் உங்களுக்குள்ள தன்னம்பிக்கை ஆகியவற்றைப் பற்றி எமக்குச் சொல்லுங்கள். குடும்ப துஷ்ப்பிரயோகத்தின் காரணமாக நீங்கள் பண விரயத்திற்கு ஆளாகியிருக்கிறீர்களா என்பதை உறுதிப்படுத்துமாறு உங்களைக் கேட்போம், ஆனால், ஆதாரங்களைத் தரவேண்டிய தேவையோ, உங்களுடைய கதையைச் சொல்ல வேண்டிய தேவையோ உங்களுக்கு இருக்காது.

**2.**

‘நிதி-நிலைப் பயிற்சி-ஆலோசனையாளர்’ (Financial Coach) ஒருவருடன் உங்களைத் தொடர்புபடுத்துவது உள்ளடங்க, உங்களுக்கு ஏற்ற வெவ்வேறு சேவைத்தெரிவுகள் என்ன என்பதைப் பற்றி உங்களுடன் கலந்துரையாடுவோம். தேவைப்பட்டால், ‘நிதி-நிலை ஆலோசகர்’ ஒருவர் அல்லது சமூக சட்ட உதவி மையங்கள், குடும்பத் துஷ்ப்பிரயோக சேவைகள் மற்றும் சமூக ஆதரவுதவிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மற்ற ‘குட் ஷெபர்ட்’ (Good Shepherd) சேவைகளுக்கு எம்மால் உங்களைப் பரிந்துரைக்க இயலும்.

### ‘நிதி-நிலைப் பயிற்சி-ஆலோசனை’ (Financial Coaching)

நிதி-நிலை சுதந்திரத்தை நோக்கி நீங்கள் பயணிக்கவும், எவ்வெப்போது உங்களைச் சந்திப்பது என்பதையும் தீர்மானிப்பதற்கான திட்டம் ஒன்றை உருவாக்கவும் உங்களுடைய ‘நிதி-நிலை பயிற்சி-ஆலோசகர்’ (Financial Coach) உங்களுடன் இணைந்து செயலாற்றுவார். உங்களுடைய இலக்குகளை நீங்கள் சாதித்துவிட்டீர்கள் என்ற உணர்வு உங்களுக்கு ஏற்படும் வரை உங்களை நாங்கள் சந்தித்துக்கொண்டிருப்போம்.

# ‘நிதி-நிலை சுதந்திர உதவி மைய’(Financial Independence Hub) த்துடன் தொடர்பு கொள்ளுங்கள்

**தொலைபேசி**
1300 050 150

**மின்னஞ்சல்**
FIH@goodshep.org.au

**வலைத்தலம்**
goodshep.org.au/FIH

Good Shepherd
Australia New Zealand
ABN 61 354 551 576